முருகப்பெருமான் துணை

**மகான் விளையாட்டுச்சித்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.06.2022**, திங்கட்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா
ஞானிகள் தனை உலகமெல்லாம் படைக்க
ஞான பலம் தந்தருளும் தேசிகா
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது மிதுன திங்கள்
குறைவிலா சஷ்டிதிகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 06 நாள், 20.06.2022 திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு விளையாட்டுச்சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழி காட்டும் ஞானி
ஞானமார்க்கம் தனை மக்கள்
நம்பிக்கை வைத்து வருக
4. வருகவே மக்களிடை மாற்றம்
வரமாக ஞான பலமாக
தரும வடிவாக வந்தடைந்து
தரணியோர் ஞானவான்கள் ஆவர்
5. ஆவதுடன் அரங்க மகானின்
ஆற்றல்மிக்க மார்க்கத்தை
புவனம் எங்கும் எடுத்துச்செல்லும்
புண்ணியவான்களாகவும் மாறுவர்
6. மாறுதல் தரும் உயர் மார்க்கம்
மாதவசி தந்த சன்மார்க்கம்
ஆறுதலாக ஏற்றுத் தொடர
அனைவரும் வள்ளல் தன்மை
7. தன்மை கூடி சிறந்துமே
தரணியில் புதுமை படைக்கும்
நன்மை செய்யும் மாந்தர்களாக
ஞானிகளாகவே ஆற்றல் பெறுவர்
8. ஆற்றல் தரும் ஆறுமுகனார்
அருளும் ஆசியும் பெற்று
மாற்றம் தனை கலியில் படைக்கும்
மகா சக்தியாக உலகோர் மாறுவர்
9. மாறுதலுமாக ஞான வழியில்
மகத்துவம் கொண்ட ஆளுமை
பேருலகம் அடையும் வண்ணம்
பெருமைபட சேவை ஆற்றும்

10. ஆற்றும் அரங்க ஞானியின்
அவதார நோக்கம் பூர்த்திபடும்
மாற்றம் உலகம் அடைந்து
மனிதர் ஆட்சி மகான்கள் ஆட்சியாக

11. ஆகவே மாற்றம் கண்டு
அகிலம் பாதுகாப்பை பெறும்
வகைபட வளர்ச்சி காணும்
வழங்கிய அருளாசி முற்றே

–சுபம்–